**தலைப்பு 329 – தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 329 – தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஆகஸ்ட் 13 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின்

வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப்பொறுப்பை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளமை அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | | கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஒழுங்குவிதிகளுடன் இணங்கி நடக்காமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|---|
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் / அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல் | 1. | கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றுதல். | 2.1.1 |
| | | 2. | பாதீட்டு மதிப்பீடு நடைமுறைச்சாத்தியமாக தயாரிக்கப்படாமை. | 2.5 |
| | | 3. | பெறுகை நடைமுறையிலான குறைபாடுகள் | 2.2 |
| | | 4. | கட்டுநிதி மதிப்பீடு தயாரிப்பதில் குறைபாடுகள் | 2.6 |
| | | 5. | மனிதவள முகாமைத்துவத்திலான குறைபாடுகள் | 2.8 |

| | | | | |
|---|---|---|---|---|
| 128(1)(இ) | நிதிப்பிரமாணம் மற்றும் அரசாங்கத்தின் ஏனைய துணை அறிவுறுத்தல்கள் தமது திணைக்களத்தில் பின்பற்றப்படுகின்றன என்பதும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன என்பதும் | | பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை. | 2.7 |
| 128(1)(ஐ) | அரசின் அலுவல்களை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட சிக்கனம், செயற்திறன், ஒழுக்கமுடைமை, நேர்மை போன்ற விடயங்களுக்கு உரிய மதிப்பினை வழங்கி தமது திணைக்களத்தின் முயற்சிகள் செய்யப்படுவதெனவும் | 1. | முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.4 |
| | | 2. | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் | 2.3 |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

**பணிப்பொறுப்புகளை நிறைவேற்றாமை**

(அ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைவதற்கான ஆயத்தம்

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் வெளியிடப்பட்ட கடிதம் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ‘‘நிகழ்ச்சி நிரல்’’ இன் பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனத்தாலும் நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்குரியதாக திணைக்களத்தினால் தமது விடயப்பரப்பின் கீழமைந்த பணிகள் தொடர்பில் எவ்வாறு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிந்திருக்கவில்லை.

இதன் காரணமாக தமது விடயப்பரப்புக்கு உள்ளமைந்த பணிகள் தொடர்பில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் இலக்குகளை அண்மிப்பதற்கான அடைவு மட்டங்களும், இலக்குகளினை அடைந்தமையை அளவிடுவதற்கான குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கு திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கமைய நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கமைய திணைக்களத்தினால் 10 பிரதான பணிகள் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த போதிலும், அந்த பணிகளில் எவையும் முழுமையாக நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் பின்வருமாறு.

(i). செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கமைய மூன்று மொழிகளிலும் சுற்றறிக்கைகள், வர்த்தமானி அறிவித்தல்கள், பத்திரிகை மற்றும் பல்வேறு அறிக்கைகளை உள்ளடக்கிய வலைத்தளத்தினை நாளதுவரையாக்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், வலைத்தளமானது அவ்வாறு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ii). பொருளாதார விடயங்களுக்கமைய திணைக்களத்தின் Apps அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என திட்டமிடப்பட்டிருந்ததுடன் ஆரம்ப பரிசோதனையான "Leave App" வடிவமைக்கப்பட்டிருந்தது. அதன் பரீட்சிப்பு நிலைமைகள் மற்றும் வெற்றிக்கமைய Apps அபிவிருத்தி செய்து முன்கொண்டு செல்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், போதியளவான அறிவு இல்லாதிருந்தமையால் அது கைவிடப்பட்டிருந்தது.

(iii). அனைத்து உத்தியோகத்தர்களின் தகவல்களை உள்ளடக்கிய மனிதவள தகவல் கட்டமைப்பொன்றினை செயற்படுத்தல் ஆரம்ப கட்டத்தில் மாத்திரம் காணப்பட்டது.

(iv). மீள நிர்மாணித்தல் மற்றும் தன்னியக்கமாக கிரயம் கட்டுப்படுத்தப்படும் வகையில் வன்பொருட்களை பராமரிப்பதற்கும் அதனூடாக உள்ளக செயற்பாடுகளை தன்னியக்கத்திற்குட்படுத்தி எழுதுகருவிகளில் கிரயத்தினை கட்டுப்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், சில திணைக்களங்களுக்காக மாத்திரம் திணைக்களத்தினால் கட்டியெழுப்பப்பட்ட பதிவேடுகள் முகாமைத்துவ கட்டமைப்பொன்றினை அறிமுகப்படுத்தியிருந்தமையால் அந்த நோக்கங்கள் நிறைவேறியிருக்கவில்லை.

(v). அரசாங்க முகாமைத்துவ செயற்றிறன் செயற்திட்டத்திற்குரிய ITMIS மென்பொருளை அபிவிருத்தி செய்யும் பணிகள் மற்றும் வன்பொருட்களை விநியோகிக்கும் பணிகள் 2018 ஆம் ஆண்டின் போது நிறைவு செய்யப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ள போதிலும், ஆகஸ்ட் 13 ஆந் திகதி வரையிலும் அந்த மென்பொருட்களின் செயற்பாட்டு மட்டத்தில் காணப்படவில்லை.

(vi). ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு புதிய இ - சம்பள கட்டமைப்பொன்றினை அறிமுகப்படுத்தல் திணைக்களத்தின் நோக்கமொன்றான போதிலும், 2018 யூலை 19 ஆந் திகதி வரையிலும் அந்தக் கட்டமைப்பினை அறிமுகப்படுத்துவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(vii). அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு இலகுவாகவும் சரியாகவும் சம்பளங்களை செலுத்துவதற்காக Payroll கட்டமைப்பினை அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அது 2018 யூலை 19 ஆந் திகதி வரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2 பெறுகை நடைமுறையினூடாக வழங்கல்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளல்

---

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) 2017 ஆம் ஆண்டிற்காக திணைக்களத்தால் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கமைய பெறுகைகள் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஆ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.14.1 ஆம் வழிகாட்டிக்கமைய சந்தை விலை ஒப்பீட்டு முறைமையை பின்பற்றும் போது வழங்குனர்களை தெரிவு செய்தல் SLT Rainbow Pages போன்றவற்றிற்கமைய மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், எழுதுகருவிகள் போன்ற சில கொள்வனவுகளின் போது அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

(இ) பெறுகைத் திட்டத்திற்கமைய எழுதுகருவிகளை கொள்வனவு செய்தல் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டிராமையால் ஒரே உருப்படி அதிகளவான விலைகளின் அடிப்படையில் கொள்வனவு செய்ய நேர்ந்திருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

## 2.3 கடமைகள் மற்றும் பொறுப்புகள்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நிதிப்பிரமாணம் 94(i) இன் பிரகாரம் கடப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு முன்னர் அதற்காக உரிய செலவின விடயங்களில் போதியளவான நிதியேற்பாடுகள் காணப்படுவதாக உறுதிப்படுத்த வேண்டிய போதிலும், அவ்வாறானதொரு உறுதிப்படுத்திலின்றி ரூபா 81,899 தொகையான கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

## 2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்ற விதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

(அ) திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் போது திணைக்களத்தில் உத்தியோகத்தர்களின் செயற்றிறன், ஒத்துழைப்பு மற்றும் எண்ணங்களை அபிவிருத்தி செய்வதற்காக வெளிவாரி பயிற்சி செயலமர்வொன்று நடாத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 447,560 செலவிடப்பட்டிருந்தது. அது தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(i) இந்த செயலமர்வு 2017 ஆம் ஆண்டிற்கான பெறுகைகள் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) செயலமர்விற்காக திணைக்களத்தின் 40 உத்தியோகத்தர்களை பங்குபற்றச் செய்வதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 25 பேர் மாத்திரம் பங்குபற்றியிருந்ததுடன், திணைக்களமல்லாத உத்தியோகத்தர்களும் பங்குபற்றியிருந்தனர்.

(ஆ) குறித்த பணி அல்லது சேவையினை நிறைவு செய்யாது நிதிப்பிரமாணம் 137, 138 மற்றும் 139 இன் ஏற்பாடுகளுக்கு முரணாக ரூபா 18,722 தொகையான காசோலையொன்று மீளாய்வாண்டின் திசெம்பர் 28 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது.

## 2.5 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 04 ஆண்டுகள் காலத்தில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 2014 | மீண்டுவருபவை | 101.8 | 100.9 | 0.9 | 1 |
| | மூலதனம் | 5.8 | 1.1 | 4.7 | 82 |
| | மொத்தம் | **107.6** | **102** | **5.6** | **5** |
| 2015 | மீண்டுவருபவை | 62.37 | 61.78 | 0.59 | 0.95 |
| | மூலதனம் | 4.61 | 4.60 | 0.01 | 0.22 |
| | மொத்தம் | **66.98** | **66.38** | **0.60** | **0.90** |
| 2016 | மீண்டுவருபவை | 37.16 | 28.65 | 8.51 | 22.90 |
| | மூலதனம் | 2.24 | 2.15 | 0.09 | 4.02 |
| | மொத்தம் | **39.4** | **30.8** | **8.59** | **21.83** |
| 2017 | மீண்டுவருபவை | 39.34 | 29.13 | 10.21 | 25.95 |
| | மூலதனம் | 7.10 | 2.89 | 4.21 | 59.25 |
| | மொத்தம் | **46.44** | **32.02** | **14.42** | **31.05** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செலவின விடயமொன்றின் மொத்த மதிப்பீட்டு நிதியேற்பாடான ரூபா 50,000 தொகையும் பயன்படுத்தப்படாது எஞ்சியிருந்தது.

(ஆ) மீண்டெழும் செலவின விடயங்கள் 4 இற்காக ரூபா 652,000 தொகையான மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையின் காரணத்தால் அந்த செலவின

விடயங்களில் நிதியேற்பாட்டினை பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பானது ரூபா 351,867 ஆக இருந்தது. அதற்கமைய செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகளில் 20 சதவீதம் முதல் 76 சதவீதம் வரையான வீச்சுடைய அளவினால் நிதியேற்பாடு எஞ்சியிருந்தது.

(இ) 03 மூலதன செலவின விடயங்களுக்காக ரூபா 6,500,000 தொகையான மிகை நிதியேற்பாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையால் அந்த செலவின விடயங்களில் நிதியேற்பாட்டினை பயன்படுத்திய பின்னரான சேமிப்பானது ரூபா 4,093,808 ஆக இருந்தது. அதற்கமைய செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் 29 சதவீதம் முதல் 99 சதவீதம வரையான வீச்சிலான நிதியேற்பாடு எஞ்சியிருந்தது.

### 2.6 கட்டுநிதிக் கணக்கு

2017 சனவரி 09 ஆந் திகதிய TO/BE1/2/IMP/329/2017 ஆம் இலக்க திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்தின் 2017 ஆம் ஆண்டிற்கான கட்டுநிதி எல்லையினை தீர்மானிப்பதற்கான கடிதத்திற்கமைய, மாதாந்த கட்டுநிதி எல்லை, காலாண்டிற்கு ஒரு தடைவை மீளாய்வு செய்து உண்மையான தகவல்களை அறிக்கையிட்டு கட்டுநிதி எல்லைகளை தீர்மானிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், திணைக்களம் அதற்கமைய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.7 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

திணைக்களத்தினால் 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடானது முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை.

### 2.8 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவு**

திணைக்களத்தின் குறிப்பிடப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட உள்ளபடியான மற்றும் வெற்றிடமான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுகின்றன. மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் ஆளணி வேதன செலவுத் தொகுதி தொடர்பாக ரூபா 24.03 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒரு நபருக்கான செலவு ரூபா 801,143 ஆக இருந்தது.

| | ஆளணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 09 | 05 | 04 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 07 | 04 | 03 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 19 | 14 | 05 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 08 | 05 | 03 |
| (v) | ஒப்பந்தம் | 02 | 02 | - |
| | மொத்தம் | 45 | 30 | 15 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கமைய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்காக உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த பதவி அங்கீகரிக்கப்பட்ட பதவியொன்றல்ல.

(ii) கூட்டிணைக்கப்பட்ட திறைசேரி முகாமைத்துவ தகவல் கட்டமைப்பு (ITMIS) செயற்திட்டம் மற்றும் வருமான முகாமைத்துவ தகவல் கட்டமைப்பு (RAMIS) ஆகியவற்றை நடைமுறைப்படுத்தும் நோக்கில் 2013 ஆம் ஆண்டு முதல் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி சிரேஷ்ட நிபுணர் மற்றும் தகவல் தொழில்நுட்ப சிரேஷ்ட நிபுணர் பதவிகளுக்காக அமைச்சரவையின் தீர்மானத்தின் அடிப்படையில் ஒப்பந்த அடிப்படையில் ஒரு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். எவ்வாறெனினும், ITMIS செயற்திட்டமானது 2018 செப்தெம்பர் 20 ஆந் திகதி வரையிலும் செயற்படு நிலைமையில் இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறு உள்ளபோது இதற்குரிய அமைச்சரவை பிரமாணக் குறிப்பிற்கமைய ITMIS மற்றும் RAMIS செயற்திட்டம் 2016 திசெம்பர் மாதம் வரையிலும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுவதாக அறிக்கையிடப்பட்டிருந்தது. இந்த உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட கோவைகளும் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2017 பெப்ரவரி 28 ஆந் திகதிய 04/2017 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையி 04 ஆம் பந்திக்கமைய திணைக்களத்தின் பிரயோகப் பயிற்சியை வழங்குவதற்காக 05 பேரை ஈடுபடுத்த முடியுமான போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 25 பயிலுனர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அவ்வாறே சில சந்தர்ப்பங்களில் பயிலுனர்களின் சேவைக்காலமானது அவ்வவ்போது நீடிப்பு செய்யப்பட்டவாறு காணப்பட்டது.

(iv) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் I ஆம் தரத்திலான கணக்காயளர் பதவியொன்று அங்கீகரிக்கப்பட்டுள்ள போதிலும், இந்த வெற்றிடத்தினை 2018 செப்தெம்பர் 20 ஆந் திகதி வரையிலும் நிறைவு செய்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.